உ
ஸ்ரீ வீர மாகாளி அம்மன் துணை
ஸ்ரீ சுடலை மாடன் சுவாமி துணை






தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந் தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந் தரும் நல்லன எல்லாந் தரும் அன்பர் என்பவருக்கே
கனந் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

கமுதி தெற்கத்திய நாடார் பங்காளிகளுக்குத் தனித்துப் புராதான பாத்தியமான குலதெய்வம்

# ஸ்ரீ சுடலை மாடன் சுவாமி திருக்கோவில் உற்சவம்
# மஹா கும்பாபிஷேகம் அழைப்பிதழ்

பேரன்புமிக்க மெய்யன்பர்களே!

நிகழும் மங்களகரமான 2041 ஆம் திருவள்ளுவர் ஆண்டு, 1186 ஆம் கொல்லம் ஆண்டு, தமிழ் விக்ருதி வருடம், மாசி மாதம் 22–ந் தேதி (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை, துவிதியை திதியும், உத்திரட்டாதி நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.45 மணிக்கு மேல் 11.45 மணிக்குள், ரிஷப லக்னத்தில் குலதெய்வம் **ஸ்ரீ சுடலை மாடன் சுவாமி மற்றும் பரிவார தேவதைகளுக்கு மஹா கும்பாபிஷேகம் உற்சவம்** வெகு சிறப்பாக அதி விமரிசையாக நடைபெறுகிறது.

## மஹா கும்பாபிஷேகம் உற்சவ நிகழ்ச்சி நிரல்

| தேதி | கிழமை | நேரம் | உற்சவ பூஜை |
|---|---|---|---|
| மாசி மாதம் 20–ம் தேதி 04.03.2011 | வெள்ளிக் கிழமை | காலை 6.05 மணிக்கு மேல் காலை 9.05 மணிக்குள் | கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், தனலட்சுமி பூஜை, கோ பூஜை |
| மாசி மாதம் 21–ம் தேதி 05.03.2011 | சனிக் கிழமை | மாலை 5.05 மணி | புனித நீர் எடுத்தல், தீர்த்த கும்பம் எடுத்தல் |
| | ,, | இரவு 7.05 மணி | வாஸ்து சாந்தி, பிரவேசவெலி பூஜை |
| | ,, | இரவு 8.05 மணி | ஆச்சார்ய வர்ணம், ரக்ஷா பந்தனம், கலா கர்ஷணம் |
| | ,, | இரவு 9.05 மணி | முதற்கால யாகசாலை பூஜை, முதற்கால யாக வேள்வி பூஜை, பூர்ணா ஹுதி தீப ஆராதனை பூஜை, பிரசாதம் வழங்குதல் |
| மாசி மாதம் 22–ம் தேதி 06.03.2011 | ஞாயிற்றுக் கிழமை | காலை 8.45 மணி | இரண்டாம் கால யாக சாலை பூஜை, யாகவேள்வி பூஜை, வேத பாராயணம் |
| | ,, | காலை 10.15 மணி | பூர்ணா ஹுதி, தீப ஆராதனை பூஜைகள், பிரசாதம் வழங்குதல் |
| | ,, | காலை 10.45 மணிக்கு மேல் காலை 11.45 மணிக்குள் | **ஸ்ரீ சுடலை மாடன் சுவாமி மற்றும் பரிவார தேவதைகள் மஹா கும்பாபிஷேகம் மற்றும் மஹா தீப ஆராதனை பூஜை** |

கும்பாபிஷேகம் உற்சவ சர்வ சாதகம் : **S. சிவசுப்பிரமணிய பட்டர்,** ஸ்ரீ சுப்ரமணியசுவாமி திருக்கோவில் பரம்பரை பூஜகர், திருச்செந்தூர்

## ஸ்ரீ வீர மாகாளி அம்மன் திருக்கோவில் 11ம் ஆண்டு வருடாபிஷேகம் உற்சவம்

நிகழும் மங்களகரமான விக்ருதி வருடம் மாசி மாதம் 10ந் தேதி (22.02.2011) செவ்வாய்கிழமை, பஞ்சமி திதியும், சித்திரை நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.35 மணிக்கு மேல் பகல் 11.35 மணிக்குள் கன்னிகா லக்னத்தில், **குலதெய்வம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் திருக்கோவிலில் 11ம் ஆண்டு வருடாபிஷேகம்** உற்சவ பூஜைகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

## மாசி பாரிவேட்டை & மாசிக்களரி திருவிழா

நிகழும் மங்களகரமான விக்ருதி ஆண்டு மாசி மாதம் 22ந் தேதி (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை இரவு 7.05 மணிக்கு மேல் **குலதெய்வம் ஸ்ரீ வீர மாகாளி அம்மன் திருக்கோவில் மாசி பாரிவேட்டை திருவிழா உற்சவமும், அன்று இரவு 12.05 மணிக்கு மேல் குலதெய்வம் ஸ்ரீ சுடலை மாடன் சுவாமி திருக்கோவில் மாசிக் களரி திருவிழா உற்சவமும் சிறப்புடன் நடைபெறுகிறது.**

நமது குல தெய்வங்கள் திருக்கோவில்களில் நடைபெறும் வருடாபிஷேகம், மகா கும்பாபிஷேகம் மற்றும் மாசித் திருவிழா உற்சவங்களில் நமது தெற்கத்திய நாடார் பங்காளிகள் குடும்பத்தினரும், நமது பிறந்த வீட்டு பெண்பிள்ளைகள் குடும்பத்தினரும், பக்த கோடிகளும், தவறாது கலந்து கொண்டு அருட்பேரானந்தமும், பெருவாழ்வும் எய்திடுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இப்படிக்கு,

## தெற்கத்திய நாடார் பங்காளிகள் ஐக்கிய அமைப்பு

27, கொத்தனார் தெரு, கமுதி – 623 603. (இராமநாதபுரம் மாவட்டம்)

| போன் & செல் தொடர்பு விவரம் | பெயர் | எண் |
|---|---|---|
| | தன.திராவிடமணி | போன் : 04576– 223123; செல் : 9443576001 |
| | பா.சோமசுந்தரம் | செல் : 9486613150 |
| | ச.சிவமுருகன் | போன் : 04576– 223253; செல் : 9942999994 |

குறிப்பு : மாசி, 21ந் தேதி (05.03.2011) சனிக்கிழமை இரவு முதல் மாசி 22ந் தேதி (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை இரவு வரை தங்கும் வசதி குலதெய்வம் ஸ்ரீ வீர மாகாளி அம்மன் ஆலய வளாகத்திலும், கோ.ன். ஆண்கள் தொடக்கப்பள்ளி வளாகத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாசி 22ந் தேதி (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை குலதெய்வம் ஸ்ரீ சுடலை மாடன் சுவாமி திருக்கோவில் வளாகத்தில் காலை சிற்றுண்டி, மதியம் மற்றும் இரவு உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.